திரு. பொ. உத்திராபதி: தலைவரவர்களே, ரெவின்யூ அமைச்சர்.....

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): இந்த மசோதா விவாதத்திற்கு வரும்போது பேசுங்கள்.

அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு, எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச், பாண்டியன்) சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(அ) புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு 1979

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, இதிலும் நான் ஏற்கெனவே எதிர்ப்பு தெரிவித்ததுபோல் தெரிவிக்க விரும்புகிறேன். புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விளைச்சல் இல்லாமல் போய்விட்டது. விளைச்சல் இருந்தால் தான் வசூலிக்கவும் நியாயம் இருக்கிறது. விளைச்சல் இல்லாமல் இருக்கிறபோது வசூலிக்கவும் நியாயம் இல்லை. அது எப்படி சட்டப்படி செல்லும். சட்டப்படி செல்லாத ஒன்றை ரத்து செய்வது தான் முறை என்று சொல்லிக்கொள்கிறேன்.

அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.